மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) 1. சிறு பால்பண்ணைகளை நிறுவுவதற்கான திட்டம்.

2. வேலையற்ற பட்டதாரிகள் மாதவரம் பால் பண்ணையில் பால் பண்ணை நடத்தும் திட்டம்.

3. கிடேரிக்கன்று வளர்ப்புத் திட்டம்.

4. பால் வற்றிய பசுக்கள் பண்ணைத் திட்டம்.

5. கால்நடைத் தீவன உற்பத்தி மும்முரத் திட்டம்.

* 741 Q.--THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state--

(*a*) whether it is a fact that a calf rearing scheme offering a maintenance allowance to owners and a subsidised fodder development scheme had been launched in recent times by the Tamil Nadu Dairy Development Corporation; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) கன்று பிறந்ததிலிருந்து ஆறுவது மாதம் தொடங்கி 18 திங்களுக்கு கன்று உதவித்தொகையாக ரூ. 240 வழங்குவதற்கு "பால் பெருக்குத் திட்டம்" வகை செய்கிறது. கால்நடைத் தீவன உற்பத்திக்காக ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200 உதவித்தொகை வழங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : மாட்டுத் தீவனம் தயாரிக்கப்பட்டு சப்சிடி ரேட்டில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் மேலும் பலவிடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா? பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க நான்கு திட்டங்கள் போட்டதில் 2 பேருக்குத்தான் வேலை கொடுக்க முடிந்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நியாயமான விலையில் தீவனம் கொடுக்கத்தான் ஆங்காங்கு சிறந்த முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கால்நடைத் தீவனம் தயார் செய்கிறார்கள். ஈரோடு கால் நடைத் தீவனத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு $\frac{1}{2}$ டன் தயார் செய்கிறார்கள். பால்வள வாரியத்தின் சார்பிலும், பால்வள நிறுவனத்தின் சார்பிலும் கால்நடைத் தீவனத் தொழிற்சாலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் கேட்ட இரண்டாவது கேள்வி என்ன?

1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேட்கிற நேரத்தில் அமைச்சர்கள் நினைவில் கொண்டு பதில் சொல்கிற அளவுக்கு ஒரு கேள்வி போடவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க நான்கு திட்டங்கள் போடப்பட்டன? 2 பேருக்குத் தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். இதற்கா அவ்வளவு பணம் செலவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம் இல்லை—பால்பண்ணை நடத்த பயிற்சி கொடுக்கும் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து வருகிறார்கள். பயிற்சிக்குப் பின் அவர்களுக்கு வங்கிகள் மூலம் பணம் கடன்கொடுத்து பால்பண்ணை ஏற்படுத்த உதவி செய்யப்படும். தனிப்பட்ட பட்டதாரி யாருக்கும் வேலை கொடுத்ததாகச் சொல்லவில்லை.

திரு. இரா. மாணிக்கவாசகம்: அமைச்சர் அவர்கள் கால்நடைத் தீவன உற்பத்தியைப்பற்றிச் சொன்னார்கள். இந்தத் திட்டம் வேகமாகச் செயல்படாத காரணத்தினால் ஆயிரக்கணக்கான கால் நடைகள் கேரளாவிற்கு ஓட்டிச் செல்லப்படுகிறது. இதைத் தடுக்க இங்கேயே கால்நடை தீவன உற்பத்தியை விரைவாகச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தீவன பற்றுக்குறை காரணமாக கேரளத்திற்கு மாடுகள் கொண்டுசெல்லப்படுவதாக இங்கே கருத்து சொல்லப்படுகிறது. அது தவறான கருத்தாகும். பசுமாடாக இருந்தாலும், காளையாக இருந்தாலும் வேலை அத்தனையும் இங்கே வாங்கிக்கொண்டு—அதன் இரத்தத்தை உறிஞ்சிய பிறகே—சக்கையாக அங்கே அனுப்பப்படுகிறது. அதுவும் கோவை மாவட்டத்தில் ஒரு வாரத்தில் பத்தாயிரக்கணக்கில் கொண்டு போகிறார்கள்.

கால்நடைத் தீவனத்தைப் பொறுத்தவரையில் ஈரோடில் நாள் ஒன்றுக்கு $\frac{1}{2}$ டன் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னேன். பால்வள நிறுவனம் மாதவரம், மதுரையில் நாள் ஒன்றுக்கு 13 டன் உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை நடத்தி வருகிறது. மாதவரத்தில் ஒரு புதிய தொழிற்சாலையையும் தொடங்க இருக்

கிறேம்—பத்து லட்சம் ரூபாய் செலவில்—நாள் ஒன்றுக்கு நூறு டன் கால்நடை தீவன உற்பத்தி செய்யக்கூடிய திறன் உடையதாக இது இருக்கும்.

திரு. கோவை செழியன்: இந்தியாவிலேயே—என்னுடைய காங்கேயம் தொகுதி கால்நடைக்குப் பெயர்போன பகுதி. இப்போது அந்தப் பகுதியில் கால்நடைத் தீவனம் இல்லாத காரணத்தினால்—திரு. மாணிக்கவாசகம் சொன்னதுபோல—குறைந்த விலைக்கே மாடுகளை விற்றுவிடுகிறார்கள். க்ரேசிங் லாண்டு என்று இருந்ததை எடுத்துவிட்ட காரணத்தினால்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா மேய்ச்சல் பகுதிக்காக என விவசாயிகள் வைத்துக்கொள்ள அரசாங்கம் யோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மேய்ச்சல் தரை என்ற பெயரால் எத்தனை பேர் நிலங்களை ஒதுக்கி கொண்டு அதில் நெல்லே சாகுபடி செய்துவந்தார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு இதுபற்றிய மானியமே விவாதத்திற்கு வர இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: கேள்வி நேரமே இன்னும் 10 நிமிடங்கள் இருக்கின்றன. தயவு செய்து துணைக்கேள்வி போட அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு வருகிற மானியத்தின் கீழ் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். இடையில் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. உரிமைப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. இனி அடுத்து...

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) முதல் ஒரு மணி நேரம் முழுவதும் வினாக்கள் கேட்க அனுமதிக்காதது குறித்து

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், நம்முடைய சட்டசபை விதியின்படி முதல் ஒரு மணி நேரம், சரியாக ஒரு மணி நேரம் கேள்விநேரத்திற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.